**MARKING SCHEME**

# மதிப்பெண் வழங்கு முறை

**பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் (2021 - 2022)**

**X STD SAMPLE QUESTION PAPER (2021 -2022)**

**தமிழ் (006)பருவம்:2 ( TAMIL, TERM-2 )**

**காலஅளவு :2 மணி** **மொத்தமதிப்பெண்கள் :40**

**Time allowed : 2 Hrs** **Maximummarks:40**

**I. <u>பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் நான்கனுக்குக் குறுகிய விடை எழுதுக</u>** **.4x2=8**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

1. வினாஎதிர் வினாதல் விடை என்பது என்ன ?

வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது வினாஎதிர் வினாதல் விடை எனப்படும் .
' என்னோடு ஊருக்கு வருவாயா ' என்ற வினாவிற்கு ' வராமல்இருப்பேனா ' என்று கூறுவது.

**2. திணைவழுவமைதிஎன்றால்என்ன?**
**ஒரு திணக்குரிய சொல் வேறு திணைக்குரிய முடிபை ஏற்றாலும் சிற்சில காரணங்களால் சான்றோர்களால் ஏற்கப்பட்டது திணைவழுவமைதி எனப்படும்.**
**(எ.கா) பசுவை என் அம்மை வந்தாள் என்பது.**

3. வினா எத்தனை வகைப்படும் அவை யாவை ?
வினா 6 வகைப்படும் . அவை
1 . அறிவினா 2. அறியாவினா
3. ஐயவினா 4. கொளல்வினா
5 .கொடைவினா 6. ஏவல்வினா

4. ஆற்றுநீர்ப்பொருள்கோள்- விளக்குக .

பாடலின் தொடக்கம் முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்தால் அது 'ஆற்றுநீர்ப் பொருள்கோள் 'ஆகும் .

எ.கா :

'சொல்லரும் சூல் பசும்பாம்பின் தோற்றம் போல்

5. **அகத்திணைஎன்றால்என்ன? எத்தனைவகைப்படும்?**

அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது அகத்திணை ஆகும்
அகத்திணை ஏழுவகைப்படும் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை கைக்கிளை பெருந்திணை என்பன அதன் வகைகள்

6.சிறுபொழுது என்றால்என்ன?

ஒருநாளின் ஆறுகூறுகள்சிறுபொழுது எனப்படும். காலைநண்பகல் எற்பாடு மாலை யாமம் வைகறை ஆகிய ஆறும் சிறுபொழுது எனப்படும்

7. குறிஞ்சியின் கருப்பொருள்கள்
   தெய்வம்- முருகன்
   உணவு -மலைநெல்,தினை
   விலங்கு- புலி,கரடி
   பறவை-கிளி,மயில்

II. **<u>பின்வரும்செய்யுள் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்குச்சுருக்கமான விடை எழுதுக.</u>** **3x3=9**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக**

8.**குலசேகராழ்வார் திருவித்துவக்கோட்டு அம்மானிடம் வேண்டுவது யாது?**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச்சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அதுபோன்று நீ உன் விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன் என்று குலசேகராழ்வார் வேண்டுகிறார்.

9.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எனப்பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

பூமியில் உயிர்கள் வாழவேண்டுமாயின் நிலத்தோடு காற்று, நெருப்பு, நீர் போன்றவை அவசியமாகும். உயிர்வாழக்காற்றும், குடிக்கவும் தாகம் தீர்க்கவும் உணவுப்பொருள் விளையவும் நீர் அவசியம். அதோடு தட்பவெட்பநிலைக்கு நெருப்பும் தேவையாகும். எனவே உயிர்கள் தோன்றும் முன்னரே இயற்கை இவற்றை ஒன்றன்பின் ஒன்றாகத்

தோற்றுவித்து உயிர்கள் வாழத் தேவையானவற்றை உருவாக்கியது எனப்பரிபாடல் பகுதி உணர்த்துகிறது.

10. புலவர்தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட ,அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான். மனம்வருந்திய இடைக்காடனார் தனக்கு நடந்த அவமானத்தை, இறைவனிடம் முறையிட்டார். இறைவனே! மன்னன் அவமதித்தது என்பாட்டையும் என்னைமட்டுமல்ல உன்னையும் உனதுமனைவியையும்தான் எனமுறையிட்டார். புலவனின் சொல் வேற்படை போல் இறைவனின் திருச்செவியில் சென்று வருத்தியது.

**11..முருகன்குழந்தையாகஅணிந்திருக்கும்அணிகலன்களுடன்செங்கீரை ஆடியநயத்தைவிளக்குக.**

முருகன் தன் திருவடிகளில் செம்பொன்னாலாகிய சிறிய கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடவும், இடையில் அரைஞாண்மணியோடு ஒளிவீசுகின்ற அரைவட்டங்கள் விடுபடவும் .பசும்பொன் எனஒளிவீசும் தொந்தியுடன் சிறுவயிறும் சரிந்து ஆடவும் ,பட்டம் அணிந்த நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவமான சுட்டியும் பதிந்து ஆடிடவும், கம்பிகள் அமைந்த குண்டலமும் குழையுடன் கூடியகாதும் அசைந்தாடவும் ,கட்டப்பட்ட சூழியும் உச்சியும் ஒளிமுத்துக்களோடு ஆடவும், வைத்தியநாதபுரியில்வீற்றிருக்கும்குகனேநீஆடிஅருள்வாயாக என குமரகுருபரர் பாடுகிறார்.

**12. அமைச்சர்களுக்குஉரியபண்புகளாகக்குறள்குறிப்பனயாவை?**

**கருவி,காலம்.செயலின் தன்மை.செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து சிறப்பாகச் செய்பவர் அமைச்சர் ஆவார்**

**மனவலிமை ,குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல்.நூல்களைக் கற்றல்.,விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக உடையவரே அமைச்சர் ஆவார்.**

III. **<u>பின்வரும்உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குக் குறுகியவிடை எழுதுக</u>** **.2x2=4**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

13.செயற்கை நுண்ணறிவு என்பது ஒருமென்பொருள் அல்லது

கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம். அதுதானாகக் கற்றுக் கொள்ளக்கூடியது

இந்த அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல தானே முடிவெடுக்கும் திறனுடையது.

ஒளிப்படங்கள், எழுத்துக்கள், காணொளிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடையது.

**.14.தெருக்கூத்துபற்றிவிளக்குக**

நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டுவரும் கலையே தெருக்கூத்து.

கூத்து இசையுடன் கூடிய உடல்அசைவு இயக்கத்துடன் தொடர்புடையது.

திறந்தவெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது.

களத்து மேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச்சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது.

15.கரகம் என்னும் பித்தளைச் செம்பையோ சிறியகுடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம்.

கரகச் செம்புதலையில் நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில்மணல் அல்லது பச்சரிசியை நிரப்புவர்.

கண்ணாடியாலும் பூக்களாலும் அழகிய கரகக்கூட்டின் நடுவில்கிளி

பொம்மை பொருத்திய மூங்கில் குச்சியைக் செருகிவைத்து ஆடுவர்.

16 அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.

பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும். மனிதவளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும் .வேலைவாய்ப்புத்தளத்தை விரிவாக்கமுடியும். இதனைச்சார்ந்து பிறமொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன.

**iv. பின்வரும்உரைநடை வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்குவிரிவான விடை எழுதுக.1x5=5**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

17. **மொழிபெயர்ப்பின் செம்மை குறித்து விவரி.**

Hundred Railsleepers were washed away என்பதைத் தொடர்வண்டியில் உறங்கிக்கொண்டிருந்த நூறுபேர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தித்தாள் வெளியிட்டது. Railsleepers என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக்கட்டைகளைக் குறிக்கும்.

அதனை உறங்கிக்கொண்டிருந்தோர் எனமொழி பெயர்த்தது பெரும்பிழையே. Camel என்பதற்கு வடம் (கயிறு) ஒட்டகம் என இரு பொருள் உண்டு .ஊசிகாதில் வடம்நுழையாது என்னும் வேற்றுமொழித்

தொடரை ஊசிகாதில் ஒட்டகம் நுழையாது என்றுமொழி பெயர்த்துப் பயன்படுத்துகிறோம்.இத்தொடரில் வடம் என்பதே பொருத்தமான சொல்லாக அமையும். அதாவது ஊசி காதில் நூல்நுழையுமே அன்றிக் கயிறு நுழையாது.

Underground drainage என்ற தொடரை மொழிபெயர்ப்பதில் தடுமாற்றம்வந்தது.பாதாளச் சாக்கடை என்பது போன்றெல்லாம் மொழிபெயர்த்தனர். மலையாள மொழியில் பயன்படுத்திய புதைசாக்கடை என்றசொல் பொருத்தமாக இருப்பதைக் கண்டனர். அதையேபயன்படுத்தவும்தொடங்கினர்.

18.**எதிர்காலத்தில் ரோபோவின் பங்களிப்பு எவ்வாறு இருக்கும் என்று விவரி**

.எதிர்காலத்தில் ரோபோவிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களை நாம் பார்க்கலாம்.

வயதானவர்களுக்கு உதவிசெய்து அவர்களுக்கு உற்றதோழனாய் பேச்சுக்கொடுக்கும் ரோபோக்களை நாம் பார்க்கலாம்.

மனிதனால் செல்லஇயலாத இடங்களுக்குச் சென்று உயிர்அச்சமின்றிப் பணியாற்றும் ரோபோக்களை நாம்பார்க்கலாம்.

விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் பணிகளை ரோபோக்கள் செய்யும்.

நம்முடன் உரையாடுவது ஆலோசனை வழங்குவது பயணஏற்பாடு செய்வது தண்ணீர் கொண்டுவந்து தருவது குழந்தைகளுக்கு வேடிக்கைகாட்டுவது எனபலவற்றை ரோபோ செய்யும்.

**V.பின்வரும் துணைப்பாடப் பொருண்மைகளுள் ஒன்று குறித்து விரிவாக எழுதுக.** **1x5=5**

**19. தன்னம்பிக்கை மனிதர் ஸ்டீபன் ஹாக்கிங்**

**ஒரு பக்க அளவில் எழுதப்படும் பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

**20. பாய்ச்சல்-கதைச்சுருக்கம்**

**ஒரு பக்க அளவில் எழுதப்படும் பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

**21.புதிய நம்பிக்கை விதைக்கும் நம்பிக்கை**

**ஒரு பக்க அளவில் எழுதப்படும் பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

VI. 22.**<u>பின்வரும் உரைநடைப்பகுதியை மூன்றில் ஒருபங்காகச் சுருக்கி வரைக</u>.** **(4)**

தலைப்பு -½

திருந்தாப் படிவம் -1

திருந்திய படிவம்- 1

உள்ளடக்கம் 1½

VII**. <u>கீழ்க் கண்டவற்றுள் ஏதேனும் ஒரு பொருள் பற்றிக் கடிதம் எழுதுக</u>.**

**1x5=5**

**<u>23.நட்பு முறைக்கடிதம்</u>**

இடம், தேதி- ½

**விளி**- -½

நலம் கேட்டல்-½

உள்ளடக்கம் 2½

முடிப்பு- ½

உறைமேல் முகவரி -½

<u>24.அலுவல் முறைக் கடிதம்</u>

**அனுப்புநர்**- ½

**பெறுநர்**- ½

**விளி**- -½

**பொருள்** -½

உள்ளடக்கம் 1½

இடம், தேதி- ½

முடிப்பு- ½

உறைமேல் முகவரி -½